தமிழ்நாடு புகைப்படக் கலைஞர்கள் சங்க புதிய அலுவலக கட்டிடத் திறப்பு விழாவின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற 140 புகைப்பட தாரர்களுக்கு இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் தலா ரூ.4,300 மதிப்புள்ள கேமரா பைகளை வழங்கினார். அப்பொழுது அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஜி.இராமகிருஷ்ணன், நக்கீரன் கோபால், பராந்தமன் எம்.எல்.ஏ., கே.எஸ். ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர். இந்நிகழ்ச்சியில் சங்கத்தைச் சேர்ந்த அண்மையில் மறைந்த புகைப்படதாரர்களின் படங்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்தினார்.

புகைப்படக் கண்காட்சியை

மாவட்டங்கள் தோறும் நடத்த அரசு துணை நிற்கும்!

தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்பட கலைஞர்கள் சங்க புதிய அலுவலகத் திறப்பு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, செப். 14 -

“உங்களது புகைப்படக் கண்காட்சியை மாவட்டங்கள் தோறும் நடத்த அரசு துணை நிற்கும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்படக் கலைஞர்களின் புதிய அலுவலகத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது கூறினார்.

தமிழ்நாடு பத்திரிகை புகைப்படக் கலைஞர்கள் சங்க புதிய அலுவலகக் கட்டிடம் திறப்பு விழா சூளையில் நடைபெற்றது. அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சி.பி.எம். ஜி. ராமகிருஷ்ணன், நக்கீரன் கோபால், பரந்தாமன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் சுதாகர், கவுன்சிலர்கள் பரிதி இளம்சுருதி, ராஜேஸ்வரி மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

தமிழ்நாடு பத்திரிகைப் புகைப்படக் கலைஞர்களின் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் 18ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்களை எல்லாம் வாழ்த்திய சி.பி.எம். கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் அவர்களே, சென்னை மாநகராட்சியின் ஆணையர் ராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் அவர்களே, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் பரந்தாமன் அவர்களே, நக்கீரன் கோபால் அவர்களே, சங்கத்தின் தலைவர் ஜோதி ராமலிங்கம் அவர்களே, துணைத் தலைவர்கள் அஸ்வின் அவர்களே, மணிவாசகம் அவர்களே, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன் அவர்களே, மற்றும் கழக நிர்வாகிகளே!

இங்கே பேசிய போது பலரும் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்களது துறையின் செயல்பாடுகளை எல்லாம் பாராட்டி பேசினார்கள். நீங்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாடும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அவருக்கும் அந்தத் துறைக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். சேகர்பாபு அவர்களின் பணிகளுக்குப் பாராட்டு விழாவும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஒருபக்கம் அவர் பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என்றும், ஒரு கூட்டம் இங்கு சுற்றிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன்.

மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டிருக்கிறேன்!

இந்த நிகழ்ச்சி என் மனதுக்கு மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் தரக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. ஏனென்றால், உங்களையெல்லாம் நான் அடிக்கடி சந்திக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தினமும் நேரில் பார்க்கின்றேன். அதுவும் குறிப்பாக, உங்கள் சங்கத்தின் தலைவர் ஜோதி ராமலிங்கம் அவர்கள், என்னை எந்த நிகழ்ச்சியில் பார்த்தாலும், இந்த நிகழ்ச்சிக்கு நீங்கள் வரவேண்டும் என்று என்னை அழைப்பார். இப்போது என்னைக் கட்டாயப்படுத்தி, இந்த நிகழ்ச்சிக்கு அழைத்து வந்திருக்கிறார். இருந்தாலும், மகிழ்ச்சியுடன் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்.

புகைப்படம் முந்திக்கொண்டு மக்களைச் சென்றடையும்!

இந்தச் சங்கம் எந்த அளவு பெருமை வாய்ந்த சங்கம் என்றால் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 ஆம் ஆண்டு இதே செப்டம்பர் 13ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்ட சங்கம், இதே போல் 17 ஆண்டுகள் சிறப்பாக வெற்றிகரமாக நடந்து முடிந்து, இப்போது 18 வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. உங்களுடைய புதிய அலுவலகத் திறப்புக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏற்கனவே, நான் சொன்னது போல், பக்கம் பக்கமாக நாம் எழுதினாலும், அவை அத்தனையும் புரிகிற மாதிரி ஒரே ஒரு புகைப்படத்தில் எடுத்துக்காட்டுவதுதான் நீங்கள். வரும் செய்திகளைவிட உங்களுடைய புகைப்படம்தான் முந்திக்கொண்டு மக்களைச் சென்றடையும் அந்த வகையில், என்னுடைய `எய்ம்ஸ் செங்கல்' புகைப்படத்தை பற்றிக்கூட நீங்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினீர்கள். அதற்கு என் நன்றி.

சமீபத்தில் எட்டு நாட்கள் நடைபெற்ற உங்களுடைய புகைப்படக் கண்காட்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அந்தக் கண்காட்சி தொடங்கி வைத்துப் பாராட்டினார்கள்.

நான் அந்தக் கண்காட்சியின் கடைசி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கண்காட்சியை முடித்து வைத்தேன். அப்போது, நான் ஒரு கோரிக்கையை உங்களிடம் வைத்தேன். இந்தக் கண்காட்சியை நீங்கள் மாவட்டம்தோறும் நடத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருந்தேன்.

அதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு, நானும் நம்முடைய அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் உங்களுக்குத் துணை நிற்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

இங்கு அழைக்கும்போதே, ஏதாவது ஒரு கோரிக்கை வைப்பீர்கள் என்று நான் நினைத்தேன். அந்தக் கோரிக்கையை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று என்னால் முடிந்தவரை அதை முடித்துத் தருகிறேன் என்று கூறிக்கொள்கி ன்றேன். உங்கள் பத்திரிக்கை புகைப்படப் பணிகளுடன் சமூகநலனையும் இணைத்துத் தான் உங்கள் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அதை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். இந்தச் சங்கம் இன்னும் பெரிதாக வளர்ந்து, இதைவிடப் பெரிய அலுவலகம் அமைக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளீர்கள். அதையும் நான் அரசு சார்பாக முடிந்தவரை நிறைவேற்றி செயல்படுத்தித் தருகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் - ரூ 31 கோடியில்

கூடலூரில் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு அடிக்கல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நாட்டினார்.

நீலகிரி, செப். 14 -

ரூ.31 கோடி மதிப்பீட்டில், நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டார அரசு மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த தேவையான கட்டப் பணிக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ஆகியோர் அடிக்கல் நாட்டி கட்டிடப் பணியினை தொடங்கி வைத்தார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டார அரசு மருத்துவமனையை ரூ.31 கோடி மதிப்பீட்டில், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கான கட்டிடப் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்கள். பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது;

முதலமைச்சர், சுற்று லாத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையான கூடலூர் தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் கூடலூர் பகுதியில் அமைந்துள்ள வட்டார அரசு மருத்துவமனையை 200 படுக்கைகள் கொண்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்த உத்தரவிட்டார். தரம் உயர்த்தப்பட்ட இந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் ரூ.31 கோடி நிதியினை ஒதுக்கி தந்துள்ளார்.

இந்த கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இது வரை 19 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மட்டுமே இருந்துள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் உத்தரவின்படி புதியதாக 19 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளை கட்டுவதற்கும், 6 அரசு மருத்துவ மனைகளை மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்துதல் என்று, 25 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளை கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் ரூ.1100 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுப்பணித்துறையின் சார்பில் 52,241 சதுர அடி பரப்பில் கூடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடம் இங்கே அமையவிருக்கிறது. மேலும் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் புதிய வசதிகளான டயாலிசிஸ் யூனிட் திறந்து வைக்கப்படவிருக்கிறது. 10 படுக்கை வசதிகளுடன் கூடிய மாவட்ட மனநலப் பிரிவு புதியதாக இங்கு தோற்றுவிக்கப்படவிருக்கிறது.

அதேபோன்று அவசர சிகிச்சைப்பிரிவு, 14 படுக்கை வசதிகளுடன் கூடிய எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு, அறுவை அரங்கம், கண் சிகிச்சை பிரிவு. மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரிவும் புதியதாக அமைக்கப்படவிருக்கிறது. இம்மருத்துவமனையின் கட்டிடப் பணிகள் முடிவடைந்தவுடன் இந்த பிரிவுகள் அனைத்தும் செயல்படத் தொடங்கும்.

நிபா வைரஸ் காய்ச்சல் அச்சம் தேவையில்லை

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை இந்த காய்ச்சல் குறித்த அச்சம் தேவையில்லை. அண்டை மாநிலமான கேரளாவில் நிபா வைரஸ் காய்ச்சல் தாக்கம் இருந்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டவுடன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டிற்கும் கேரளாவிற்கு மான எல்லைகளில் உள்ள 6 மாவட்டங்களான நீலகிரி, கோவை, திருப்பூர், கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கேரளாவில் இருந்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வருபவர்களை கண்காணித்து சோதனை செய்யப்படவிருக்கிறது. அப்படி சோதனை செய்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வந்தால் அதற்குரிய சிகிச்சைகள் அளிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது. எனவே பெரிய அளவில் அச்சம் கொள்ள தேவையில்லை என்று மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. மு.அருணா, இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.பழனிச்சாமி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் துறைமுகம் மேற்கு பகுதியில் கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார் தலைமையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் கழக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. குடிசை வாழ் மக்கள் 1000 குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார். விழாவில் பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி , எஸ்.இராஜசேகர் , மண்டலகுழு தலைவர் பி. ஸ்ரீராமுலு மற்றும் வட்ட கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் பகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளின் மாவட்ட , பகுதி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வட்ட கழக செயலாளர்கள் பா.அண்ணாதுரை , ஜி.ராமமூர்த்தி நன்றி கூறினர்.

தமிழ்நாட்டில் அர்ச்சகர்களாக

ஆலயங்களில் 3 மகளிர் பணியமர்த்தப்படுகிறார்கள்!

‘தி இந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு!

சென்னை, செப்.14-

இதுவரை ஆண் அர்ச்சகர்களே இருந்து வரும் நிலையில் தமிழ்நாட்டில் 3 மகளிர் அர்ச்சகர்கள் ஆலயங்களில் பணியமர்த்தப்படுகிறார்கள் என்று பாராட்டு தெரிவித்து ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

முதன்முறையாக, பயிற்சி பெற்ற மூன்று தமிழ்நாட்டுப் பெண்கள் விரைவில் கோயில்களில் உதவி அர்ச்சகர்களாக பணியமர்த்தப்படுகிறார்கள். மூன்று இளம் பெண்கள் ஸ்ரீரங்கநாதர் கோவிலின் கீழ் இயங்கும் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் தங்கள் பயிற்சியை முடித்து, விரைவில் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவ கோவில்களில் பணியமர்த்தப்படுவார்கள்.

செப்டம்பர் 12, அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு மூன்று பெண் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இன்னும் ஓராண்டில் எஸ். கிருஷ்ணவேணி, எஸ்.ரம்யா, ரஞ்சிதா ஆகியோர் பாஞ்சராத்ர ஆகமத்தைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவக் கோயில்களில் உதவி அர்ச்சகர்களாக பணியேற்கவுள்ளனர். மாநிலத்தில் பட்டர்களாகப் பயிற்சி பெற்ற முதல் மூன்று பெண்கள், ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீ ரங்கநாதர் கோயிலின் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்கள்.

முதுகலை பட்டதாரியான திருமதி ரம்யா, இறைவனுக்கு சேவை செய்ய விரும்பி அர்ச்சகர் பள்ளியில் சேர்ந்தார். “நாங்கள் ஒரு ஆண் கோட்டையை உடைத்து, பூசாரிகளாக பயிற்சி பெற்றுள்ளோம். பெரிய கோவில்களில் இடம் பெறுவோம் என்று நம்புகிறோம், இதன் மூலம் நல்ல வெளிப்பாட்டைப் பெற முடியும், மேலும் மேலும் அறிந்துகொள்ள முடியும். இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்ல முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மட்டுமே நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்,'' என, கூறினார்.

செப்டம்பர் 12, 2023 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவிடம் சான்றிதழ்களைப் பெறுவதற்காக அந்த இளம் பெண் வந்திருந்தார். அவர்கள் பட்டர்களாகப் படிப்பதற்கும் வேலை செய்வதற்கும் சரியான தகுதியைக் கொண்டிருப்பதைக் கண்டறிந்தனர். அவர்கள் படிப்பில் தவறாமல் கலந்து கொண்டனர், அந்த நேரத்தில் அவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. அனைத்து அர்ச்சகப் பயிற்சி பெற்றவர்களுக்கும் அவர்களின் இன்டர்ன்ஷிப்பின் போது உதவித்தொகை கிடைக்கும், என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

பி.எஸ்சி முடித்தவர் எஸ். கிருஷ்ணவேணி. கணிதவியல் பட்டதாரி. அவர் பட்டமும் சேர்ந்தாள். “எங்கள் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் என் அப்பாவும் தாத்தாவும் சேவை செய்கிறார்கள். பாஞ்சராத்ர ஆகமப்படி அனைவரும் பயிற்சியின் ஆறாவது மாதத்தில் மன்னார்குடி செண்டலங்கார ஜீயரிடம் தீக்ஷை பெற்றுள்ளோம். இந்த ஆகமம் ஐந்து இரவுகளில் ஐந்து ரிஷிகளுக்கு பகவான் ஸ்ரீ நாராயணனால் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆண்டவர் எங்களுக்குத் தருவார் என்று நாங்கள் நம்புவதால், சம்பளத்தைப் பற்றி நானோ மற்றவர்களோ கவலைப்படவில்லை,” என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மொத்தம் 98 அர்ச்சக பயிற்சியாளர்கள் மற்றும் நான்கு ஓதுவார் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, இதில் சிறப்பு அதிகாரி ஜே. குமரகுருபரன் மற்றும் ஆணையர் கே.வி.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் முப்பெரும் விழா!

மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள்!

திருவள்ளூர், செப்.14-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் வேண்டுகோள் வருமாறு :

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், கழகம் துவங்கிய நாள், பகுத்தறிவு பகலவன் ஈரோட்டு தந்தை பெரியார் பிறந்த நாள் ஆகிய முன்று நிகழ்வுகளும் முப்பெரும் விழாவாக ஆண்டு தோறும் கழகம் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளாக இருட்டிலே தவித்து வந்த தமிழக மக்களுக்கு விடிவு தந்து பொற்கால ஆட்சியை முதல்வர் அவர்கள் எண்ணற்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நாள்தோறும் ஒரு திட்டம் என்ற கொள்கையோடு, மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கல்வித்துறை, மருத்துவ துறை, வேளாண்மைத் துறை, தொழில் துறை, மகளிர் நலன், வேலைவாய்ப்புத் துறைகளிலும் தமிழக முன்னேற்றத்திற்காக இருபத்தி

நான்கு மணி நேரமும் உழைத்து கொண்டிருக்கிறார் நம் முதல்வர் தளபதி.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், கொள்கைகள், லட்சியங்கள், அடித்தட்டு மக்களை சென்று சேரும் வண்ணம், முப்பெரும் விழாவை எழுச்சியாகக் கொண்டாட வேண்டியது ஒவ்வொரு கழகத் தொண்டனின் கடமையாகும். அந்த வகையில் தென்னாட்டு காந்தி, இந்நாட்டு பெர்னாட்ஷா காஞ்சித் தலைவன், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தமிழருக்கான தமிழ்ர் நலன், தமிழ்நாட்டு நலனுக்காக கழகம் துவங்கிய நாள் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாளை முப்பெரும் விழாவாக கொண்டாடும் வகையில். கழககொடி யேற்றி, இரு வண்ணக் கொடி ஏந்தி, கழக சாதனைகளை விளக்கி, பிரச்சாரப் பாடல்களை ஒலிபரப்பி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலைகளுக்கு மாலைகள் அணிவித்து, இனிப்புகள் வழங்கவும், நலத்திட்டங்கள் வழங்கியும் மிகச்சிறப்பான வகையில் கொண்டாட வேண்டுகிறேன்.

வேலூரில் முப்பெரும் விழா!

மேலும் வேலூரில் செப்17ல் நடைபெறும் முப்பெரும் விழாவில் நமது மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் அமைச்சர், மாநில ஆதிதிராவிட நலக்குழுத் தலைவர் மீஞ்சூர் க.சுந்தரம் அவர்கள் கழகத் தலைவர் தளபதி தமிழக முதல்வர் திருக்கரங்களால் அண்ணா விருது பெறுகிறார். அன்னாருக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் மாவட்டத்தைச் சார்ந்த கழகத் தோழர்கள் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்திட வேண்டுகிறேன்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, வழக்கறிஞரணி, மகளிரணி, விவசாய அணி, இலக்கிய அணி, தொண்டரணி, வர்த்தக ரணி, தொழிலாளர் அணி, நெசவாளரணி, ஆதிதிரவிடர் நலக்குழு, சிறுபான்மை நலப்பிரிவு, மீனவர் அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மருத்துவ ரணி, பொறியாளரணி, விவசாயத் தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி, தக வல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, தொ.மு.ச மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.